**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING ENVIRONMENTAL CLEARANCE FOR THE M/s. C.SENTHIL KUMAR FIRECLAY QUARRY I, S.F. NO.361/2 (PART) & 361/3, , M/s. C.SENTHIL KUMAR FIRECLAY QUARRY II, S.F.NO.336/4(PART), 336/5, 336/8, & 336/9, AND M/s. S.S.MINERALS FIRECLAY QUARRY, S.F.NO.434/1, 434/3(PART) & 435/1 LOCATED AT THERANI VILLAGE, ALATHUR TALUK, PERAMBALUR DISTRICT HELD ON 19.12.2024 AT M/s. RAAJ MAHAL, NEAR WEEKLY MARKET, PADALUR MAIN ROAD, ALATHUR TALUK, PERAMBALUR DISTRICT.**

**PRESIDING OFFICERS:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Mr. S. Vaithyanathan | : | Personal Assistant to the District Collector (General)/Deputy Collector, Perambalur District. |
| 2. | Mrs. S. Vijaya Priya | : | District Environmental Engineer, TamilNadu Pollution Control Board, Perambalur District. |

**PROPRIETOR:**

| | | | |
|---|---|---|---|
| 3. | Mr. C. Senthil Kumar | : | **Project-1**<br>**M/s.C. Senthil Kumar Fireclay Quarry-I,**<br>No.361/2 (part) & 361/3,<br>Therani Village, Alathur Taluk,<br>Perambalur District.<br><br>**Project-2**<br>**M/s.C. Senthil Kumar Fireclay Quarry- II,**<br>S.F.No.336/4(Part),336/5,336/8, & 336/9,<br>Therani Village, Alathur Taluk,<br>Perambalur District. |

**Project-3**

**M/s. S.S.Minerals Fireclay Quarry**

S.F.No. 434/1, 434/3(Part), & 435/1,

Therani Village, Alathur Taluk,

Perambalur District.

The total number of people who attended the meeting, including the Proprietor of the Fireclay Quarry, Government Officials, Environmental Activists and the General Public, was 475. (copy of the attendance register is attached herewith).

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Perambalur, said** "Good morning to everyone, Welcome the Personal Assistant to the Collector (General) who presiding over the public hearing meeting for the proposed fireclay quarries of M/s. C. Senthilkumar Fire Clay Quarry-I, S.F. No. 361/2(P), 361/3 over an extent 2.21.5 hectares, M/s. C. Senthilkumar Clay Quarry-II, S.F. No. 336/4(P), 336/5, 336/8, 336/9 over an extent 3.21.50 hectares and M/s. S.S. Minerals, S.F. No. 434/1, 434/3(P), 435/1 over an extent 4.13.5 hectares located at Therani Village, Alathur taluk, Perambalur district and welcomed the government officials, the public, Volunteers and all the friends from the press and media, Police officers on behalf of the Tamil Nadu Pollution Control Board and the Perambalur District Administration.

As the proposed fire clay mining project falls within the quarry cluster of 500m radius with the total extent of 10.85.5 Hectares, the Public hearing is being held to obtain Environmental Clearance from the State Environmental Impact Assessment Authority.

She said that press release regarding the meeting to be held today has been published 30 days in advance in 'The New Indian Express' English Newspaper and 'Dinamalar' Tamil newspaper dated 12.11.2024. Further publicity has already been done through pamphlets, posters and loudspeakers to inform the people living in Terani and surrounding villages about the public consultation meeting. The Project Environmental Consultant will give a detailed presentation on these three proposed projects and after that the general public can register their comments one by one by giving their name and address and the opinions of the public so registered will be recorded in audio and video format and sent to the State Environmental Impact Assessment Authority. At present, the environmental consultant will explain the project description".

**Environmental consultant**

He welcomed the Personal Assistant to Collector (General), who preside the Public hearing of the M/s. S.S.Minerals fireclay and extend his welcome to the District Environmental Engineer, the police officers and the large gathering of the public.

These three proposed fireclay quarry project is located in Therani village, Alathur taluk, Perambalur district. He said that news about public hearing meeting was published in The New Indian Express and Dinamalar 30 days in advance. He also said that the Tamil Nadu Pollution Control Board has been advertising the project through pamphlets, posters and loudspeakers to inform the public living in the surrounding area. He also explained in detail about the Environmental Impact Statement of the project (Photocopy of the project summary is attached).

**Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Perambalur**

She asked the public to mention their Name and Address before giving their comments.

Following this, the public who participated in the consultation meeting expressed their views as follows.

1. **Thiru. Chandrasekar, Karai Village**

We have been told that Rs.12/- will be collected for transporting 1 ton of sand with permit. The same amount will be used for social welfare of the local people and also, they said that they will do drinking water facility and road facility for the village but nothing is done till date. He requested the district collector along with local planning body should look into this and should provide drinking water facility and road facility for the village.

2. **Thiru Muthamizhselvan, Member, Farmers Union of India, Karai Village**

He said Government should do welfare for general public. Also, he said both industry and farming is essential for this area and presence of industry can provide job opportunity to youth. Further, he welcomed the proposed mining quarry.

3. **Thiru Kalaiyarasan, Chairman of Panchayat Council, Karai**

He said both education and industry are inevitable for country's growth and we should encourage who intends to set up business in village. Further, he told during farming season, the local people will do farming and during other period, they will do mining job, which will improve their livelihood. He told the project proponent shall provide job opportunity to the local people and should encourage them. He also added that the proposed mining project shall provide funds for the development of their village.

4. **Thiru S. Rajendran, Head Master, Therani Government High School**

He told he joined as Head Master in Therani School when it was Middle school and later the school is upgraded to High School in 2017 with 145 students. In those situation, there was no table and desk for students and teachers and students were sitting in the floor. When he sought help from Thiru. Siva Mines owner, they have arranged the same within one week time.

Now, 176 students are studying in Therani High School and it will be upgraded as Higher Secondary School. So, he requested the project proponent to adopt the school. Also, he said with the proposal of mining, it will improve their livelihood and mines willing to do welfare for the local people. Hence, he welcomed the project.

5. **Thiru. Chandrasekar, Karai Village.**

He said owners of M/s. K. A. Ravichandran and M/s. J. A. Mines have left the mine pits open and the water which would drain in lake is diverted to these pit. Because of this, there is no water in Therani Lake and requested the District Collector to carry out a survey and make a channel for the water going to the pit to reach the lake.

6. **Thiru. Pithosa Kumar, Secretary, Therani Village**

M/s. S.S. Minerals and Mr. Senthilkumar are doing everything necessary for the common people in the town. They are doing well for everyone regardless of race. Mines work is done in summer seasons while work is done in agricultural lands in rainy season, and the mines company is providing necessary computers and other helps to school students and he

also said that there is no impact in the surrounding 4 villages due to the loading of soil from the mines company.

7. **Tmt. Durga, Kaarai Village**

She said that mines should provide employment opportunities to the people of Karai village and not only in Karai village but also to all the surrounding villages.

8. **Thiru. Sathish, Secretary**

He said that Permanent house to be built for the villagers of Karai and to preserve the natural resources and fertility of the soil and S.S. Minerals and Mr. Senthilkumar Mines should be given environmental clearance immediately.

9. **Thiru. Mani, Advocate, Therani**

He thanked everyone for attending the Public hearing of M/s. S.S. Minerals and M/s. Senthilkumar Mines. The mines is to be located in the field area between the four villages at a distance of 5 kms from Karumangalam, 4 kms from Therani, 3.75 kms from Karai and 4.5 kms from Aynapuram village and the operation of this quarry will not cause any harm to the general public. He also said that permission should be given for setting up the quarry, and there is no objection from the public to set up this quarry.

10. **Tmt.Latha,Karai Village**

She said that the people of Karai village are benefiting from working in the quarry and the mines company is doing various benefits to the people of the village, so they have no objection to the proposal of mines.

11. **Thiru. Suresh, Aynapuram Village**

He said that since the mines have been running for a long time, the youth of the town are getting employment opportunities and the mines should do more benefits to the people and Siva Mines Company has provided various assistance for the construction of roads in the village.

12. **Thiru.Neelraj, Karai Village,**

He welcomed all the attendees to the Public hearing of M/s. S.S. Minerals and M/s. Senthilkumar Mines. He said that because of Siva Mines, all the villagers of Karai, Therani,

Aynapuram are living well and M/s. Siva Mines started the business on a small scale and now it has grown to a large scale and the operation of the mine does not cause any harm to the general public. He said that the Mines company is providing various assistance to the village for road facilities, agriculture and school.

Earlier, various mining companies were operating in this town, but they could not continue to operate and left the village without continuing the mining activity, but only Siva Mines was still running and that was because his brother had already worked in the mining sector and was familiar with the operations of the mines. He also said that the soil taken from the mine is being exported to foreign countries as well.

He also said that many villagers have got job opportunities due to the operation of M/s. Siva Mines and they are also providing job opportunities to workers from outside the state, so he wishes M/s. Siva Mines to grow further.

**13. Thiru Ezhumalai, Therani**

He said that the lorries were going at high speed in the village and cause disturbance to the people and they should go at the permissible speed for lorry driving. And lately drivers are talking on mobile phone leaving one hand in steering wheel. He requested that the vehicle should be driven at a certain speed, saying that it is likely to cause an accident.

He also requested people to avoid turning the vehicle too fast on the bends as the villagers, goats, cows and children are walking on the roads and to be careful while turning on the bends.

**14. Thiru. Kumar,Therani Village**

Therani people said they are not providing jobs. But people are not ready to do the work if they are given a job and the mines owner can only give them qualified work and people expect work beyond their qualification. So, people should avoid it. He said that the administrators should also make appropriate arrangements to provide jobs to the public.

**15. Thiru. Prashanth (Mechanical Engineer)**

He said that he has bought a lorry and is working in a company and he is getting income from the management and he is thankful to the company that provides him with livelihood.

**16. Thiru Raja, District Vice President and Union Secretary, Tamil Nadu Farmers Association, Therani**

He said that they operating mines by obeying law and follow road rules and does not affect the surrounding environment. Hence, he expressed his support to the proposed project.

**Personal Assistant to Collector (General)** said, members of the public have registered their comments. He informed that all these will be recorded and audio and video and all petitions will be sent to Chennai for further process.

Since no public came forward to express their views, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Perambalur concluded the public heating with vote of thanks.

**Enclosures**

1. Copy of attendance register of Public hearing (41 pages 475 members)
2. Presentation of Project Summary
3. Copy of petitions received during Public hearing-25 Nos.
4. Video recording of public hearing CD

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Perambalur**

**Personal Assistant to Collector**
**(General)/Deputy Collector**
**Perambalur**

(3/3)

**பெரம்பலூர் வட்டம், தெரணி கிராமம், தி/ள். C. செந்தில்குமார் அதிக வெப்பநிலையை தாங்கும் திறன் கொண்ட களிமண் குவாரி-I, புல.எண்.361/2 பகுதி, 361/3, தி/ள். C. செந்தில்குமார் அதிக வெப்பநிலையை தாங்கும் திறன் கொண்ட களிமண் குவாரி-II, புல.எண்.336/4 பகுதி, 336/5, 336/8 மற்றும் 336/9-ல் மற்றும் தி/ள். S.S. மினரல்ஸ் அதிக வெப்பநிலையை தாங்கும் திறன் கொண்ட களிமண் குவாரி, புல.எண்.434/1, 434/3 பகுதி, 435/1- ல் ஆகிய குவாரிகளுக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்காக பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், பாடாலூர் மெயின் ரோடில், வாரச்சந்தை அருகில் அமைந்துள்ள தி/ள் ராஜ் மஹால் திருமண மண்டபத்தில் 19.12.2024 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள்.**

**<u>தலைமை அதிகாரிகள்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வைத்தியநாதன் | : | மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்/துணை ஆட்சியர், பெரம்பலூர் மாவட்டம். |
| 2. | திருமதி. சு. விஜயபிரியா | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெரம்பலூர். |

நிறுவனத்தினர்

3. உரிமையாளர்
திரு. C.செந்தில்குமார் :

**<u>திட்டம்-1</u>**
தி/ள். C. செந்தில்குமார் அதிக
வெப்பநிலையை தாங்கும் திறன் கொண்ட
களிமண் குவாரி-I,
புல.எண்.361/2 பகுதி, 361/3,
தெரணி கிராமம், ஆலத்தூர் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம்.

**<u>திட்டம்-2</u>**
தி/ள். C. செந்தில்குமார் அதிக
வெப்பநிலையை தாங்கும் திறன் கொண்ட
களிமண் குவாரி-II,
புல.எண்.336/4 பகுதி, 336/5, 336/8 மற்றும் 336/9
தெரணி கிராமம், ஆலத்தூர் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம்.

<u>திட்டம்-3</u>
தி/ள். மினரல்ஸ் அதிக வெப்பநிலையை
தாங்கும் திறன் கொண்ட களிமண் குவாரி
புல.எண்.434/1, 434/3 பகுதி, 435/1,
தெரணி கிராமம், ஆலத்தூர் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர், அரசு அலுவலர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் பொது மக்களின் மொத்த எண்ணிக்கை - 475 ஆகும். (வருகைப் பதிவேட்டின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெரம்பலூர்** அவர்கள், "அனைவருக்கும் இனிய காலை வணக்கம், பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், தெரணி கிராமத்தில் தி/ள். C. செந்தில்குமார் களிமண் குவாரி-I, புல.எண்.361/2 பகுதி, 361/3-ல், 2.21.5 ஹெக்டேர் மற்றும் தி/ள். C. செந்தில்குமார் களிமண் குவாரி-II, புல.எண்.336/4 பகுதி, 336/5, 336/8, 336/9-ல் 3.21.50 ஹெக்டேர் மற்றும் தி/ள்.S.S. மினரல்ஸ், புல.எண். 434/1, 434/3 பகுதி 435/1-ல் 4.13.5 ஹெக்டேரில் அமைந்துள்ள அதிக வெப்பநிலையை தாங்கும் திறன் கொண்ட களிமண் குவாரிகளுக்கான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்தித்தர வருகைபுரிதுள்ள பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் அவர்களையும் ஏனைய அரசுத்துறை அதிகாரிகளையும், பொதுமக்களையும், தன்னார்வலர்களையும், காவல் துறை அதிகாரிகள், பத்திரிக்கை மற்றும் ஊடகத்துறை நண்பர்கள் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாகவும், பெரம்பலூர் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும் வருக வருக என்று வரவேற்றார்.

குழுமத்திற்குள் உள்ள குவாரிகள் மாநில சுற்றுச்சூழல் தாக்க ஆணையத்திடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெரும் பொருட்டு இக்கூட்டமானது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்றும், இன்று நடைபெறும் இக்கூட்டம் குறித்து 12.11.2024 தேயிட்ட தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் மற்றும் தினமலர் தமிழ் செய்தித்தாள் ஆகியவற்றில் 30 நாட்களுக்கு முன்னதாகவே பத்திரிக்கை செய்தி வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

மேலும் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் குறித்து தொரணி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் வசிக்கும் பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் மற்றும் ஒலிப்பெருக்கி மூலம் ஏற்கனவே விளம்பரம் செய்யப்பட்டுள்ளது என்றும் முன்மொழியப்பட்ட இம்மூன்று திட்டங்கள் குறித்து திட்ட சுற்றுச்சூழல் ஆலோசகர் அவர்கள் விரிவாக எடுத்துரைப்பார்கள்என்றும் அதன் பின்னர் பொது மக்கள் ஒவ்வொருவராக தங்களுடைய பெயர் மற்றும் முகவரியை தெரிவித்துவிட்டு தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்யலாம் என்றும், அவ்வாறு பதிவு செய்யப்படும் பொதுமக்களின் கருத்துக்கள் ஒலி மற்றும் ஒளி வடிவில் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் தெரிவித்தார்கள். தற்போது சுற்றுச்சூழல் ஆலோசகர் அவர்கள் திட்ட விளக்கம் குறித்து எடுத்துரைப்பார்கள் " என்றும் கூறினார்.

**சுற்றுச்சூழல் ஆலோசகரின் உரை**

தி/ள்.S.S.மினரல்ஸ் அவர்களின் அதிக வெப்பம் தாங்கும் திறன் கொண்ட களிமண் குவாரி திட்டத்திற்கு நடைபெறும் பொதுமக்களின் கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்த வருகைபுரிந்துள்ள மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் அவர்களையும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களையும் காவல்துறை அதிகாரிகள் அவர்கள் மற்றும் திறளாக கூடியிருக்கும் பொதுமக்களையும் வரவேற்றார்.

இந்த 3 முன்மொழியப்பட்ட அதிக வெப்பம் தாங்கும் திறன் கொண்ட களிமண் குவாரி திட்டமானது தெரணி கிராமம், ஆலத்தூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்காக 30 நாட்களுக்கு முன்பே தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினமலர் நாளிதழில் வெளியிடப்பட்டது என்று தெரிவித்தார். மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் சுற்று வட்டாரத்தில் வசிக்கும் பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் மற்றும் ஒலிப்பெருக்கி மூலம் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். மேலும் இத்திட்டத்தின் சுற்றுச்சூழல் திட்ட அறிக்கையை பற்றி விரிவாக விளக்கிக் கூறினார் (திட்டச்சுருக்கத்தின் ஒளி நகல் இணைக்கப்பட்டுள்ளது).

**உதவிப் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்** அவர்கள், பொதுமக்கள் தங்களது கருத்துகள் கூறும் முன்பாக தங்களது பெயர் மற்றும் முகவரியை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்தார்கள்.

**1. திரு. சந்திரசேகர் காரை கிராமம்.**

மண்ணை எடுத்துச்செல்ல பர்மிட்டுடன் 1 டன்னுக்கு ரூ.12/- வசூலிக்கப்படுவதாகவும், அந்த பணத்தை ஊர் பொது மக்களின் நலனிற்கு செலவிடப்படுவதாக கூறுகிறார்கள் என்றும், கிராமத்தில் தண்ணீர் வசதி சாலை வசதி செய்து கொடுப்பதாக கூறுகிறார்கள் அனால் இதுவரைக்கும் எவ்வித நன்மைகளும் பொதுமக்களுக்கு கிடைக்கப்பெறவில்லை என்றும், மாவட்ட ஆட்சியர் அவர்கள் வட்டார வளர்ச்சி அலுவலருடன் இணைந்து கூட்டாய்வு மேற்கொண்டு கிராமத்திற்கு சாலை மற்றும் தண்ணீர் வசதியை செய்துகொடுக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

**2. திரு.முத்தமிழ்செல்வன், உறுப்பினர், இந்திய விவசாயிகள் சங்கம், காரை கிராமம்.**

பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் அரசாங்கம் முன்னின்று பொதுமக்களுக்கான நலப்பணிகளை செய்ய வேண்டும் என்றும், இப்பகுதியில் தொழிற்சாலை மற்றும் விவசாயம் ஆகியவை பொதுமக்களுக்கு மிகவும் அவசியமானது என்றும், தொழிற்சாலை இருந்தால் தான் பொதுமக்களுக்கும், இளைஞர்களுக்கும் அதிகமான வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்றும் கூறினார். மேலும், இப்பகுதியில் அமையவிருக்கும் மைன்ஸ் திட்டத்தை தான் வரவேற்பதாகவும் கூறினார்.

**3. திரு.கலையரசன், காரை ஊராட்சி மன்ற தலைவர்.**

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு கல்வியும், தொழிலும் மிகவும் இன்றியமையாதது என்றும், கிராமத்தில் தொழில் முனைவோர்களை நாம் ஊக்கப்படுத்த வேண்டும் என்றும் கூறினார். மேலும் கிராம மக்கள் விவசாய காலங்களில் விவசாயத்தை செய்வதாகவும், மற்ற காலங்களில் இந்த மைன்ஸ் வேலையை பயன்படுத்தி தனது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்றும், மைன்ஸ் நிறுவனத்தினர் கிராம மக்களுக்கு வேலை கொடுத்து கிராம மக்களை ஊக்குவிக்க வேண்டும் என்றும், இந்த சுரங்கத்தின் மூலமாக எங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்து கிராம வளர்ச்சிக்கு தேவையான உதவிகளை செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

**4. திரு.செ.ராஜேந்திரன், தலைமை ஆசிரியர், தெரணி அரசு உயர்நிலைப்பள்ளி.**

தெரிணி கிராமத்திலுள்ள பள்ளியானது நடுநிலைப்பள்ளியாக இருந்தபோது தான் பள்ளியின் தலைமை ஆரியராக பொறுப்பேற்றதாகவும், அதன் பின்னர் பள்ளியானது 2017-ல் அரசு உயர்நிலை பள்ளியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் பள்ளியில் 145 மாணவ, மாணவியர்கள் பயின்று

வந்ததாகவும் பள்ளியில் மாணவர்கள் அமர டேபில், டெஸ்க் மற்றும் ஆசிரியர்கள் அமர மேஜை நாற்காலி ஆகிய எதுவும் இல்லாமல் மாணவர்கள் தரையில் அமர்ந்து கல்விகற்ற நிலையில், தான் அப்பகுதியில் இயங்கிவந்த தி/ள். சிவா மைன்ஸ் உரிமையாளர் அவர்களை உதவிக்காக நாடியபோது அவர்கள் பள்ளிக்கு தேவையன அனைத்து டேபில், டேஸ்க் மற்றும் ஆசிரியர்கள் அமருவதற்கு மேஜை நாற்காலி ஆகியவற்றை ஒரு வார காலத்தில் ஏற்பாடு செய்து பள்ளிக்கு கொடுத்து உதவியதாகவும் தெரிவித்தார்.

தற்போது தெரணி பள்ளியில் 176 மாணவ, மாணவியர்கள் பயின்றுவரும் நிலையில், அரசு உயர்நிலைப்பள்ளியானது அரசு மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்படும் நிலையில் உள்ளதால், மைன்ஸ் நிறுவனமானது பள்ளியை தத்தெடுத்துக்கொள்ள முன்வர வேண்டும் என்றும், மைன்ஸ் நிறுவனத்தின் இயக்கத்தினால் பொதுமக்களின் வாழ்வாதாரம் மேம்படும் எனவும், மேலும் நிறுவனமானது மக்கள் நலப்பணிகளை செய்ய தயாராக இருப்பதாகவும் தெரிவித்து, இந்த மைன்ஸ் திட்டத்தை தான் வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

**5. திரு. சந்திரசேகர் , காரை கிராமம்.**

தி/ள்.K.A.ரவிச்சந்திரன் மைன்ஸ் மற்றும் தி/ள். J.A.மைன்ஸ் ஆகிய மைன்ஸ் நிறுவனத்தினர்கள் ஆங்காங்கே குழியை வெட்டி அதற்கு கரை அமைக்காத காரணத்தினால் ஏரிக்கு வரவேண்டிய தண்ணீரானது நேராக குழிக்கு செல்வதாகவும், தெரணி கிராமத்திலுள்ள ஏரியில் நீரே இல்லை என்றும் மைன்ஸ் பகுதியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு குழிக்கு செல்லும் தண்ணீரை வாய்க்கால் அமைத்து ஏரிக்கு வர வழிவகை செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

**6. திரு.பிதோசா குமார், செயலாளர், தெரணி**

தி/ள்.S.S.மினரல்ஸ் மற்றும் திரு.செந்தில்குமார் ஆகியோர் ஊரில் பொது மக்களுக்கு தேவையான அனைத்தையும் செய்து கொண்டு வருகின்றனர் என்றும், இன வேற்றுமை பாராமல் அனைவருக்கும் நன்மைகளை செய்வதாகவும், வெயில் காலங்களில் மைன்ஸ் வேலை நடைபெறுவதாகவும், மழைக்காலங்களில் விவசாய நிலங்களில் வேலை நடைபெறுவதாகவும், பள்ளி மாணவ மாணவியர்களுக்கு தேவையான கணினி மற்றும் பல உதவிகளையும் மைன்ஸ் நிறுவனத்தினர் செய்து வருவதாகவும், மைன்ஸ் நிறுவனத்தில் இருந்து மண்ணை ஏற்றி செல்வதால் சுற்றியுள்ள 4 கிராமங்களிலும் எவ்வித பாதிப்பும் இல்லை என்றும் கூறினார்.

**7. திருமதி. துர்கா, காரை கிராமம்.**

மைன்ஸ் நிறுவனமானது காரை கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும், காரை கிராமத்தில் மட்டுமின்றி சுற்றியுள்ள அனைத்து கிராம மக்களுக்கும் வேலை வாய்ப்பை வழங்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

**8. திரு.K.சதீஷ், செயலாளர்.**

காரை கிராம மக்களுக்கு நிரந்தர வீடு கட்டித்தர வேண்டும் என்றும், இயற்கை வளத்தையும், மண்ணின் வளத்தையும் காப்பாற்ற வேண்டும் என்றும், தி/ள்.S.S.மினரல்ஸ் மற்றும் திரு.செந்தில்குமார் மைன்ஸ் நிறுவனத்திற்கு உடனடியாக சுறறுச்சூழல் அனுமதி வழங்கவேண்டும் என்றும் கூறினார்.

**9. திரு.மணி, அட்வகேட், தெரணி கிராமம்**

தி/ள். S.S.மினரல்ஸ் மற்றும் திரு.செந்தில்குமார் மைன்ஸ் நிறுவனத்தின் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு வருகைபுரிந்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். இந்த மைன்ஸ்சானது

கருமங்கலம் கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்திலும், தெரணி கிராமத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தூரத்திலும், காரை கிராமத்திலிருந்து 3.75 கிலோ மீட்டர் தூரத்திலும் மற்றும் ஜனாபுரம் கிராமத்திலிருந்து 4.5 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளன என்றும், மேற்கண்ட 4 கிராமங்களுக்கும் இடைப்பட்ட வயல் பகுதியில் குவாரி அமைக்கப்படுவதாகவும், இந்த குவாரி அமைவதில் பொது மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும், எனவே குவாரி அமைய அனுமதி வழங்கவேண்டும் என்றும், இந்த குவாரி அமைவதில் பொதுமக்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும் கூறினார்.

**10. திருமதி. லதா,காரை கிராமம்.**

காரை கிராம பொது மக்கள் குவாரியில் வேலை செய்து நன்மை பெற்றுவருவதாகவும், மைன்ஸ் நிறுவனத்தினர் ஊர் பொது மக்களுக்கு பல்வேறு நன்னைகளை செய்துவருவதாகவும், எனவே மைன்ஸ் வருவதில் தங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும் தெரிவித்தார்.

**11. திரு.சுரேஷ், ஜனாபுரம் கிராமம்.**

மைன்ஸ் நீண்ட காலமாக நடைபெறுவதால் ஊர் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைப்பதாகவும், மேலும் நிறுவனமானது மக்களுக்கு மேலும் பல நன்மைகளை செய்ய வேண்டும் எனவும், ஊரில் சாலை அமைப்பதற்கு பல்வேறு உதவிகளை சிவா மைன்ஸ் நிறுவனத்தினர் செய்து தொடுத்ததாகவும் தெரிவித்தார்.

**12. திரு. நீல்ராஜ்,காரை கிராமம்.**

தி/ள். S.S.மினரல்ஸ் மற்றும் திரு.செந்தில்குமார் மைன்ஸ் நிறுவனத்தின் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு வருகைபுரிந்துள்ள அனைவரையும் வரவேற்றார். தி/ள், சிவா மைன்ஸ் நிறுவனத்தின் இயக்கத்தினால் காரை, தெரணி, ஜனாபுரம் கிராம மக்கள் அனைவரும் நலமுடன் வாழ்வதாகவும்,

தி/ள். சிவா மைன்ஸ் நிறுவனமானது சிறிய அளவில் தொழிலை ஆரம்பித்து தற்போது பெரிய அளவில் வளர்ந்துள்ளதாகவும், மைன்சின் இயக்கத்தினால் பொது மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை இல்லை என்றும். மைன்ஸ் நிறுவனத்தினர் கிராமத்தில் சாலை வசதிகளுக்கும், விவசாயத்திற்கும், பள்ளிக்கூடத்திற்கும் பல்வேறு உதவிகள் செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

இதற்குமுன், இந்த ஊரில் பல்வேறு மைன்ஸ் நிறுவனங்கள் இயங்கிவந்ததாகவும், ஆனால் அவைகள் தொடர்ந்து இயங்க முடியாமல் மைன்சை காலி செய்து ஊரை விட்டு சென்றுவிட்டதாகவும், ஆனால் தி/ள். சிவா மைன்ஸ் நிறுவனத்தினர் மட்டுமே தொடர்ந்து இயங்கிவருவதாகவும், அதற்கு காரணம் அவரின் அண்ணன் ஏற்கனவே சுரங்கத்துறையில் வேலை செய்ததால், மைன்சின் செயல்பாடுகளை நன்கு அறிந்தவர் என்றும் தெரிவித்தார். மேலும் மேற்கண்ட மைன்சில் எடுக்கப்படும் மண்ணானது வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் தி/ள்.சிவா மைன்ஸ் இயக்கத்தினால் அதிகமான கிராம மக்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளதாகவும், வெளி மாநில தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பை வழங்குவதாகவும், எனவே சிவா மைன்ஸ் மென்மேலும் வளர தன்னுடைய வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் கூறினார்.

**13. திரு.ஏழுமலை, தெரணி**

ஊருக்குள் லாரிகள் அதிக வேகத்துடன் செல்வதாகவும் மக்களுக்கு இடையூறாக இருப்பதாகவும், லாரி ஓட்டுவதற்கென அனுமதிக்கப்பட்ட வேகத்தில் செல்ல வேண்டும் என்று கூறினார். மேலும் சமீபத்தில் ஓட்டுநர்கள் ஒரு கையில் கைப்பேசியில் பேசிக்கொண்டும், மற்றொரு கையில் ஸ்டேரிங் பிடித்து வாகனத்தை ஓட்டி செல்கின்றனர். இதனால் விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், எனவே வாகனத்தை குறிப்பிட்ட வேகத்தில் ஓட்டவேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்.

மேலும் சாலைகளில் ஊர்ப்பொதுமக்கள், ஆடு, மாடுகள் மற்றும் குழந்தைகள் நடந்து செல்வதால் வளைவுகளில் மிக வேகமாக சென்று வாகனத்தை திருப்புவதை தவிர்க்க வேண்டும் என்றும், வளைவுகளில் திரும்பும்போது கவனத்துடன் செல்லவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

**14. திரு. குமார்,தெரணி கிராமம்.**

தெரணி மக்கள் வேலை தரவில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் வேலை கொடுத்தால் வேலையை செய்வதற்கு மக்கள் தயாராக இல்லை என்றும், தகுதிக்கேற்ற வேலையை மட்டுமே நிர்வாகம் தரமுடியும் என்றும் மக்கள் தங்களின் தகுதிக்கு மீறிய வேலையை எதிர்ப்பார்க்கிறார்கள். எனவே மக்கள் அதை தவிர்க்க வேண்டும். நிர்வாகத்தனரும் பொதுமக்களுக்கு வேலை வழங்க உரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

**15. திரு.பிரசாந்த் (மெக்கானிக்கல் இன்ஜினியர்)**

தான் ஒரு லாரி வாங்கி நிறுவனத்தில் வேலை செய்துவருவதாகவும், நிர்வாகத்தின் இயக்கத்தினால் தனக்கு வருமானம் வருவதாகவும், அதன் வாயிலாக தனக்கு வாழ்வாதாரம் வழங்கும் நிறுவனத்திற்கு நன்றி தெரிவிப்பதாகவும் கூறினார்.

**16. திருராஜா, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட துணை தலைவர் மற்றும் ஒன்றிய செயலாளர், தெரணி**

மைன்ஸ் நிறுவனமானது சட்டத்திற்கு உட்பட்டு போக்குவரத்து சாலை வசதிகள் மற்றும் பொதுமக்களுக்கு சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்படாதவாறு நிறுவனத்தை நடத்துவதாகவும் தெரிவித்தார். எனவே நிறுவனத்திற்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர்: பொதுமக்கள் தங்கள் கருத்துகளை பதிவு செய்துள்ளிர்கள். இவை அனைத்தும் பதிவு செய்யப்பட்டு ஆடியோ மற்றும் வீடியோ மற்றும் மனுக்கள் அனைத்தும் சென்னைக்கு அனுப்பப்படும் என்று தெரிவித்தார்.

இதனையடுத்து பொதுமக்கள் எவரும் கருத்துகள் கூற முன்வராததால் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறி நிறைவு செய்தார்.

இணைப்பு :

1. பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டோரின் பெயர் பட்டியல் (41 பக்கங்கள்: 475 நபர்கள்)
2. திட்ட உரை விளக்கக்காட்சி
3. பொது மக்களின்.கருத்துக் கேட்புக் கூட்டம் தொடர்பாக பெறப்பட்ட மனுக்கள் - 25 எண்கள்
4. பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட ஒளிப்பதிவு குறுந்தகடு.

07/01/25
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
பெரம்பலூர்

7/1/2025
மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர்/
துணை ஆட்சியர்,
பெரம்பலூர் மாவட்டம்.

(2/3)